செய்தி வெளியீடு எண் : 2550 நாள் : 18.12.2023

# செய்தி வெளியீடு

**தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை – தென் மாவட்டங்களில் அதிகனமழை பொழிவு – போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் – மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன் அவர்கள் அறிக்கை – 18.12.2023.**

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களில் அதி கனமழை பெய்யக்கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து 17.12.2023 காலை முதல் திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களில் பரவலாக கன மழை பெய்து வருகிறது. குறிப்பாக திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஒரு மணி நேரத்தில், பல பகுதிகளில் அதி கனமழை பதிவாகியுள்ளது.

17.12.2023 காலை 8.30 மணி முதல் இன்று காலை (18.12.2023) காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு

| வ.எண். | மாவட்டம் | பதிவான மழை அளவு (செ.மீ.) |
|---|---|---|
| 1. | திருநெல்வேலி | 39.12 |
| 2. | தூத்துக்குடி | 37.96 |
| 3. | தென்காசி | 20.68 |
| 4. | கன்னியாகுமரி | 11.87 |

**அதி கனமழை பதிவான பகுதிகள்**

| வ.எண். | மாவட்டம் | மழைமானி நிலையம் | பதிவான மழை அளவு (செ.மீ.) |
|---|---|---|---|
| 1. | தூத்துக்குடி | காயல்பட்டினம் | 94.6 |
| | | திருச்செந்தூர் | 68.9 |
| | | ஸ்ரீவைகுண்டம் | 62.1 |
| | | கோவில்பட்டி | 52.5 |
| | | சாத்தான்குளம் | 47.1 |

| | | | |
|---|---|---|---|
| 2. | திருநெல்வேலி | மூலக்கரைப்பட்டி | 61.5 |
| | | மாஞ்சோலை | 55.2 |
| | | ஊத்து | 49.7 |
| | | நாலுமுக்கு | 46.9 |
| | | பாளையங்கோட்டை | 44.2 |
| | | அம்பாசமுத்திரம் | 43.0 |
| | | சேரன்மாதேவி | 41.2 |
| | | கண்ணடியன் அணைக்கட்டு | 40.6 |
| | | காக்காச்சி | 36.0 |
| | | நம்பியார் அணை | 35.7 |
| 3. | கன்னியாகுமரி | மைலாடி | 30.32 |
| | | நாகர்கோவில் | 18.10 |

கனமழை எச்சரிக்கையினைத் தொடர்ந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக பேரிடர் மீட்புப் படை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

**மீட்புப் படை**

| வ.எண். | மாவட்டம் | தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை | | தேசிய பேரிடர் மீட்புப் படை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | குழுக்கள் | வீரர்கள் | குழுக்கள் | வீரர்கள் | குழுக்கள் | வீரர்கள் |
| 1 | திருநெல்வேலி | 6 | 150 | 4 | 100 | 10 | 250 |
| 2 | கன்னியாகுமரி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 3 | தூத்துக்குடி | 3 | 75 | 4 | 100 | 7 | 175 |
| 4 | தென்காசி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | **மொத்தம்** | **9** | **225** | **8** | **200** | **17** | **425** |

**மேலும், தேசிய பேரிடர் மீட்புப் படையின் 2 குழுக்கள் மீட்பு நடவடிக்கைகளுக்காக வர உள்ளன.**

**இதுமட்டுமின்றி, இந்திய இராணுவம் மற்றும் கடலோர பாதுகாப்பு படையினரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.**

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதிப்புக்குள்ளாகக் கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பொதுவான எச்சரிக்கை நடைமுறை மூலம் (Common Alert Protocol) மூலம் 62.72 இலட்சம் நபர்களுக்கு எச்சரிக்கை குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பாததிப்பிற்குள்ளாகக்கூடிய பகுதிகளில் இருந்து பொதுமக்கள் முன்கூட்டியே நிவாரண முகாம்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

| நிவாரண முகாம்கள் விபரம் – 17.12.2023 – காலை 8 மணி நிலவரப்படி | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண். | மாவட்டம் | நிவாரண முகாம்களின் எண்ணிக்கை | குடும்பங்களின் எண்ணிக்கை | தங்க வைக்கப்பட்டுள்ள நபர்கள் | | | |
| | | | | ஆண் | பெண் | குழந்தைகள் | மொத்தம் |
| 1 | திருநெல்வேலி | 41 | 502 | 1081 | 1141 | 501 | 2723 |
| 2 | கன்னியாகுமரி | 9 | 173 | 211 | 239 | 67 | 517 |
| 3 | தூத்துக்குடி | 26 | 870 | 1764 | 1849 | 443 | 4056 |
| 4 | தென்காசி | 8 | | 43 | 67 | 28 | 138 |
| மொத்தம் | | 84 | 1545 | 3099 | 3296 | 1039 | 7434 |

**மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்படும் படகுகள் விபரம்**

| வ. எண். | | தேசிய பேரிடர் மீட்புப் படை | தீயணைப்பு துறை | மீன்வளதுறை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி | 4 | 21 | 10 | 35 |
| 2 | கன்னியாகுமரி | 4 | 10 | 5 | 19 |
| 3 | தூத்துக்குடி | 4 | 10 | 10 | 24 |
| 4 | தென்காசி | 4 | 2 | 0 | 6 |
| | மொத்தம் | 16 | 43 | 25 | 84 |

**திருநெல்வேலி மாவட்டம் முக்கிய அணைகள் / நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு விபரம்**
**(18-12-2023 அதிகாலை 8.30 மணி நிலவரப்படி)**

| வ. எண். | அணை / நீர்த்தேக்கம் | கொள்ளளவு அடி / மில்லியன் கன அடி | நீர் இருப்பு அடி / மில்லியன் கன அடி | நீர் இருப்பின் விழுக்காடு | நீர் வரத்து (கன அடி) | நீர் வெளியேற்றம் (கன அடி) | மழை அளவு |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பாபநாசம் | 143.00<br>5500 | 133.55<br>4924 | 89.54% | 25000 | 20000 | -- |
| 2. | மணிமுத்தாறு | 118.00<br>5511 | 108.70<br>4593 | 83.10% | 13915 | 10000 | 12.0 |
| 3. | சேர்வலாறு | 156.00<br>1225.00 | 142.85<br>990 | 80.73% | -- | 5000 | -- |
| 4. | வடக்கு பச்சையர் | 49.20<br>442.00 | 49.20<br>442.00 | 100.00% | 751 | 751 | -- |
| 5. | நம்பியார் | 22.96<br>82.17 | 22.96<br>82.17 | 100.00% | 2714 | 2714 | 345.0 |
| 6. | கொடுமுடியாறு | 52.50<br>121.84 | 49.50<br>107.52 | 88.25% | 435 | 100 | 295.0 |
| 7. | கடனாநதி | 85.0<br>336 | 82.0<br>302 | 89.88% | 4053 | 4053 | -- |

**கன்னியாகுமரி மாவட்டம் முக்கிய அணைகள் / நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு விபரம்**
**(18-12-2023 அதிகாலை 7.00 மணி நிலவரப்படி)**

| வ. எண். | அணை / நீர்த்தேக்கம் | கொள்ளளவு அடி / மில்லியன் கன அடி | நீர் இருப்பு அடி / மில்லியன் கன அடி | நீர் இருப்பின் விழுக்காடு | நீர் வரத்து (கன அடி) | நீர் வெளியேற்றம் (கன அடி) | மழை அளவு |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பேச்சிப்பாறை | 48 | 45.54 | 91.77% | 3696 | 5032 | -- |
| | | 4350 | 3983.54 | | | | |
| 2. | பெருஞ்சாணி | 77 | 75.25 | 94.70% | 3143 | 5087 | -- |
| | | 2890 | 2725 | | | | |
| 3. | சித்தார் I | 18 | 16.89 | 92.71% | 534 | 534 | -- |
| | | 393.35 | 363.89 | | | | |
| 4. | சித்தார் II | 18 | 16.99 | 93.66% | -- | -- | -- |
| | | 600 | 560.81 | | | | |

மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு வரப்பெற்ற 13 புகார்கள் உரிய மேல் நடவடிக்கைக்காக தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசு பேருந்துகள் முக்கிய தடங்களிலும் அவசர கால உதவிக்காகவும் சம்மந்தப்பட்ட மாவட்ட நிருவாகங்களின் உத்தரவுப்படி இயக்கப்படுகின்றன.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், கண்காணிப்பு அலுவலர்களும் முகாமிட்டு முன்னெச்சரிக்கை, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் திருநெல்வேலி மாவட்டத்திற்கு விரைந்துள்ளார்.

கனமழையின் தாக்கத்தை எதிர்கொள்ள மாவட்ட நிருவாகத்தால் அனைத்து விதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in